**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.</u>**

முன்னிலை: **திரு. ம.சி. கண்ணதாசன்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**<u>2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14–ஆம் நாள் செவ்வாய்க்கிழமை</u>**
**<u>I.A.05/2024 in O.S.50/2023</u>**

காசிநாதன், வயது 58,
த/பெ. ஆறுமுகம்,
வடக்கு தெரு, மாதாகோவில் அருகில்,
ஜெயங்கொண்டம்,
உடையார்பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம். ... மனுதாரர்/வாதி

//எதிர்//

1. சேகர்,
த/பெ. துரைசாமி,
2. விஜய் (எ) விஸ்வநாதன்,
த/பெ. துரைசாமி,
இருவரும், வடக்குதெரு,
மாதாகோவில் அருகில்,
ஜெயங்கொண்டம்,
உடையார்பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம். ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது மனுதாரர் தரப்பில் சி.பி.சி.ஆர்டர் 26 ரூல் 9 மற்றும் பிரிவு 151–ன் படி அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக சமூகம் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணிபுரியும், யாரேனும் ஒரு வழக்கறிஞரை நீதிமன்ற ஆணையராக நியமணம் செய்து, தாவா சொத்துக்களை சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலரின் உதவியுடன் அளந்து, அத்திட்டு, வரைபடம் மற்றும் அறிக்கையை தாக்கல் செய்ய உத்தரவாக வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்த நாள்: 18.07.2024.
நீதிமன்ற கட்டணமாக ரூ.20/– செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கு கடந்த 22.09.2025 தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R. ஜெயராமன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. M. பிரான்ஸிஸ் சேவியர் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் கேட்டும், மனு, பிரமாணவாக்குமூலம் மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

**கட்டளையாணை**

இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

**சொத்துவிபரம்**

**1 வது அயிட்டம்**

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், ஜெயங்கொண்டம் சார்பதிவகத்தைச் சேர்ந்த புதிய சர்வே எண்.573/34ல் இதில் (பழைய சர்வே எண்.134/3 ல் ) ஜெயங்கொண்டம் நத்தம் சர்வே எண் 134/3 ல் 6 ஏக்கர் 75 செண்டில், தென்வடல் வீதிக்கு மேற்கு, கொளஞ்சி காலிமனைக்கு வடக்கு, மகாலிங்கம் பாக மனைக்கு தெற்கு, வாதியின் பாகமனைக்கும், துரைசாமி பாக மனைக்கும் கிழக்கு, இதில் தென்வடல் ஜாதியடி, கீழ்புறம் 18, மேல்புறம் 16 ¼ , கீழ்மேல் ஜாதியடி 17,

மேற்படி நம்பரில் துரைசாமி பாக காலிமனைக்கு வடக்கு, வாதியின் பாக மனைக்கு மேற்கு, மகாலிங்கம் பாகமனைக்கு தெற்கு, தையல்நாயகி வீடு மனைக்கு கிழக்கு, இதில் வடபுறம் 36, தென்புறம் 34, தென்வடல் ஜாதியடி மேற்புறம் 14 1/3 , கீழ்புறம் 16 ¼ உள்ள மனை. மேற்படி சொத்து ஜெயங்கொண்டம் வருவாய் கிராம, நத்தம் மனைவரிப் பட்டா எண்.470 ல் உள்ளது.

**2 வது அயிட்டம்**

மேற்படி தாவா 1 வது அயிட்ட சொத்தில், மேற்படி சர்வே நம்பரில் கட்டப்பட்டுள்ள வாதியின் ஓட்டுக்கல் வீட்டிற்கு, மேல்புற சுவற்றிற்கு அருகில் தென்வடல் 3 மீட்டர் நீளத்திற்கும், கீழ்மேலாக 1 மீட்டர் அகலத்திற்கும், உள்ள இடத்தில், (1,2 பிரதிவாதிகளால் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள) செங்கல் சுவர், மேற்படி வாதியின் ஓட்டுகல் வீட்டின், மேற்புற சுவற்றிக்கு நடுவில், கீழ்மேலாக வாதியின் இடத்தில் ஆக்கிரமித்துள்ள 8 மீ நீளமும், தென்வடலாக 1 மீ அகலமும், உள்ள இடம் மற்றும் அதில் பிரதிவாதிகள் கட்டியுள்ள செங்கல் சுவர்.

2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14–ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்படுகிறது.

(ஒம்/–திரு.ம.சி.கண்ணதாசன் எம்.எல்.,)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.